# தமிழில் சொற்பொருள் மாற்றமும் வளர்ச்சியும் - ஓர் வரலாற்றுப் பொருண்மையியல் ஆய்வு

**முனைவர் பா.சந்திரமோகன்**
உதவிப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

மொழி ஆற்றல் வாய்ந்த கருத்துப் பரிமாற்றத்திற்கான தலையாய கருவி ஆகும். இது ஒலி, ஒலியன், உருபு, உருபன், சொல், சொற்றொடர் மற்றும் வாக்கியம் எனப் பல உள்ளமைப்புகளைக்கொண்டது. பல நூற்றாண்டு காலமாக பேசப்பட்டுவரும் ஒருமொழி பல மாற்றங்களை அடைவது இயற்கை ஒலிகளை அவற்றின் சேர்க்கைகளின் வாயிலாகப் பல்வேறுமுறைகளில் வடிவமைத்து சமுதாயம் சார்ந்த பொருள் கூறுகளாகமாற்றி சமுதாய இயக்கத்திற்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் மொழி பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பயன்படும் மொழி காலப்போக்கில் ஒருசில மாறுபாடுகளையும், வளர்ச்சியையும் அடைவது இயல்பான ஒன்றாகும். பேச்சு நடை மற்றும் பேச்சு முறை என்ற நிலையில் தனிமனிதனின் பேச்சிலேயேகூட மாற்றத்தை அல்லது வேறுபாட்டை காணமுடியும். இந்நிலையில் ஒரு மொழியைப் பேசும் தந்தையின் பேச்சுக்கும் அவர் மகனின் அல்லது மகளின் பேச்சுக்குமிடையே மாற்றங்கள் காணப்படுகின்றன. தந்தை வாழ்ந்த சூழ்நிலையும் மகன்/ மகள் வாழும் சூழ்நிலையும் இத்தகைய வேற்றுமைக்குக் காரணமாக இருப்பதோடு இக்காலப் பகுதியில் ஒருமொழி காணும் மாற்றத்தின் விளைவாக இவ்வேற்றுமை ஏற்படுகின்றது.

தமிழ் மொழியின் வரலாற்றினை பார்க்கும்போது சங்ககாலத் தமிழுக்கும் இக்கால தமிழுக்கும் வேறுபாடுகள் உள்ளமையைக் காணலாம். ஒலியமைப்பிலும் இலக்கண அமைப்பிலும் வேற்றுமைகள் காணப்படுதல் போன்று சொல்லாட்சியிலும் மாற்றங்களைக் காணலாம்.

பழந்தமிழில் /k/, /t/, /p/ போன்ற ஒலிப்பில்லா (voiceless sound) ஒலிகள் தான் இருந்தனவே அன்றி அதற்கு இணையான /g/, /d/ /b/ போன்ற ஒலிப்புடைய (voiced sound) ஒலிகள் இல்லை. தற்காலத் தமிழில் குறிப்பாகப் பேச்சுத்தமிழில் மூக்கொலிகளுக்கு (nasal sound) முன்னரோ அல்லது பின்னரோ வருகின்ற ஒலிப்பில்லா ஒலிகள் ஒலிப்புடைய ஒலிகளாக மாறி பயன்பாட்டில் உள்ளன. எடுத்துக்காட்டாக சங்கம், தங்கம், பதில், பாவம் போன்ற சொற்களில் இந்நிலையினைக் காணலாம். யாண்டு, யாடு, யானை போன்ற பழந்தமிழ் சொற்களில் உள்ள மொழி முதல் /y/ தன்னிலை இழந்து தற்பொழுது ஆண்டு, ஆடு, ஆனை என மொழியில் ஏற்படும் ஒலிமாற்றமும் மாற்றத்திற்குக் காரணமாகின்றது. மேலும் வருதும், வந்திலன், வரின், வருவை, காண்மார், வருநர் போன்ற பல்வேறு சொல்லமைப்பு தற்காலத் தமிழில் காணமுடியாததோடு இலக்கண அமைப்பில் காணப்படும் மாற்றங்களுக்கு சான்றாகின்றது.

ஒலியமைப்பிலும், இலக்கண அமைப்பிலும் வேற்றுமைகள் காணப்படுதல் போன்று சொல்லாட்சியிலும் மாற்றங்களைக் காணலாம். வல்சி, நகில், வற்கடம், புரவி, கனலி, அளறு போன்ற சங்ககாலத்தில் காணப்பட்ட சொற்கள் பலவற்றை இக்கால தமிழில் காணமுடியாது. சொற்பொருள் மாற்றத்திலும் இத்தகைய வேறுபாட்டைக் காணலாம். புறநானூற்றில் 'கோயில்' எனும் சொல் 'அரண்மனை' எனும் பொருளைத்தர தேவார, நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் எழுந்த காலத்திலும் இக்காலத்திலும் 'இறைவனுடைய இருப்பிடம்' எனும் பொருளைத் தருகிறது. இதைப்போலவே 'குப்பை' எனும் சொல் 'தானியக்குவியல்' என்ற பொருளில் வழங்கிடத் தற்காலத் தமிழில் தேவையற்றப் பொருள் என்ற பொருளைத் தரக்காண்கிறோம். ஒரு சொல்லுக்கு தொடக்கத்தில் அமைந்த பொருளே எப்போதும் வழங்கவேண்டும் என்ற நியதி இல்லை. தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு முதலியவற்றைக் குறித்த 'பொன்' எனும் சொல் இன்று தங்கத்தை மட்டும் குறிக்கிறது. எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட நெய் எள் நெய், எண்ணெய் என்று குறித்த நிலை மாறி அதன் பொருள் விரிவடைந்து இன்று தேங்காய் எண்ணெய், சூர்யகாந்தி எண்ணெய், மண்ணெண்னை எனப் பல வகைகளைக் குறிக்கிறது. சொல் பொருள் உணர்த்தும்முறையில் ஏற்படும் மாறுதல்களை ஆராய்வதைச் சொற்பொருளியல் என்று மொழியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். சொற்பொருள் பற்றி வரலாற்றுநிலையில் ஆய்வு செய்யும்போது சொல் அது உணர்த்தும் பொருள்நிலையில் மாற்றம்பெறுவதோடு, பொருளோடு சொல்லும் சேர்ந்து வழக்கு இழக்கும் நிலையை மொழியில் காணலாம். எடுத்துக்காட்டாக,

| | | |
|---|---|---|
| **நெய்** | - | **எண்ணெய்** |
| **வாக்கு** | - | **வார்த்தை** |
| **குலுக்கல்** | - | **அசைத்தல்** |
| **மைந்தன்** | - | **படைவீரன்** |

போன்ற சொற்கள் பழந்தமிழில் மேற்குறிப்பிட்ட பொருள்களில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இவை இக்காலத்தமிழில் முறையே நெய், வாக்குரிமை, லாட்டரி, மகன், போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றன. 'கழகம்' என்ற சொல் 'தீயவர்களின் கூட்டணி' என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இன்று 'மக்கள் கூட்டணி' என்ற பொதுவான பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இதைப் போலவே கீழ்காணும் சொற்கள் பண்டைத் தமிழில் பயன்படுத்தப்பட்டுவந்த நிலையில் இக்காலத் தமிழில் அவை வழக்கொழிந்து போனதோடு அவை குறித்த பொருளும் வழக்கிழந்து விட்டன.

| | | |
|---|---|---|
| **அரியல்** | - | **ஒரு வகைப் போதைப் பானம்** |
| **தூணி** | - | **ஒரு வகை அளவை** |
| **அம்பணம்** | - | **ஒரு வகை அளவை** |
| **தெரிவை** | - | **பெண்ணின் பருவம்** |

மொழி வரலாற்றிலும், வளர்ச்சியிலும் இத்தகைய மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையாகும். மொழியில் ஏற்படும் மாறுதல்களை மொழிப் பயன்படும் காலத்திற்கேற்ப நிலைமுறை முறையிலும் (Synchronic), வரலாற்று நிலையின் (Diachronic) அடிப்படையிலும் ஆய்வு செய்யலாம். சொற்பொருண்மை அடிப்படையில் ஆராயும்போது சொல்லிற்கான பொருள் (Meaning), புலன் (Sense), மாற்றம் (Change), குறுக்கம் (Restriction), நீட்டம் (Extension) போன்றவற்றை அச்சொல் வழங்கும் சூழலே தீர்மானிக்கிறது. சொற்களை அவை வழங்கும் சூழலோடு நெருங்கி அணுகும்போது அதற்கான பொருளை நாம் அறிய முடியும் அல்லது வெளிப்படுத்த முடியும். புறஉலக அறிவு (Knowledge of external world), கருத்தாடல் (Discourse), பயன்வழியியல் (pragmatics), மொழியியல் புலப்பாடு (Linguistic Communication), பேச்சு நடை மற்றும் முறை (style and register), கிளைமொழி வேறுபாடு (dialectal variation), இருநிலை வழக்கு (Diaglossia), சமுதாய, கலாச்சார, பொருளாதார மாற்றங்கள் (Social, Cultural and Economic change) போன்றவை சொற்களுக்கான பொருளை அவற்றின் சூழலில் இருந்து அறியப் பெரும் துணைபுரிகின்றன.

## தொல்காப்பியமும் பொருண்மையியலும்

தொல்காப்பியம் தமிழுக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகவும் தொன்மையானது ஆகும். தொல்காப்பியத்தின் அணுகுமுறைகள் தற்கால நவீன மொழியியல் அணுகுமுறைகள் பலவற்றுடன்

தொடர்புடையனவாக உள்ளன. மொழிக்கூறுகளின் பொருண்மை வெளிப்பாடு இன்றி கருத்துப் பரிமாற்றம் நிகழ முடியாதென்பதால் மொழி ஆராய்ச்சியில் பொருண்மையியல் ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரியல் என்பன சொல்லின்தன்மையை வெளிப்படுத்துவன. சொற்களின் பொருளை உணர்த்தி நிற்பது பொருள் இலக்கணம் எனப்படும்.

**"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொ.சொ.640)**

மொழியில் உள்ள சொற்கள் அனைத்தும் பொருள் குறித்து வருகின்றது என்பது தொல்காப்பியர் கூற்று. இதே கருத்தினைத்தான் மொழியியல் பேரறிஞர் ஜான் லயன்ஸ் குறிப்பிடுகிறார். (John Lyons (1968) proposes to define semantic structure in terms of sense relations utilizing the paradigmatic and syntagmatic relations. He defines the sense of word as "its place in a system of relationships which it contracts with other words in the vocabulary").

**"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும்என்மனார் புலவர்" (தொ.சொ.641)**

என்று தொல்காப்பியர், சொற்கள் உணர்த்தும் பொருளின்தன்மையை அறிதலும் அச்சொல்லின் தன்மையையே அறிதலும் சொல்லினால் ஆகும். பொருண்மை, சொன்மை என்பன சொல்லின் இரு பண்புகள் என்ற நிலையில் 'சான்றோர்' என்பது பொருண்மை தெரிதல் எனவும் அச்சொல் உயர்திணைப் பலர்பால் என அறிதல் சொன்மை தெரிதல். என்றும் கூறுகிறார்கள். சொற்கள் சூழ்நிலையை நோக்கிப் பல்வகைப்பட்ட பொருள் நுட்பங்களைப் புலப்படுத்துகின்றன. பொருண்மை சுட்டல் வெளிப்படையாகவும் அமையலாம் சூழ்நிலையைப் பொறுத்து குறிப்பாகவும் அமையலாம்.

**''தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற் றென்ப பொருண்மை நிலையே" (தொ.சொ.642)**

சொல் தனித்தொரு பொருளை கொடுப்பது மட்டுமன்றி சூழலால் குறிப்புப் பொருளையும் தோற்றுவிக்கிறது. நீ மிகவும் நல்லவன் என்பதன் நேர்பொருள் வேறு. அதுவே எள்ளல் என்னும் குறிப்புப் பொருளும் தருகிறது. எனவே சொல்லின் பொருள் அதன் வழக்கையொட்டி அமைகின்றது. தொல்காப்பியர் வழக்கை இரண்டாகப் பகுக்கின்றார்.

**"தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்**
**பகுதிக் கிளவி வரைநிலை யிலவே" (தொ.சொ.500)**

தகுதி வழக்கு மற்றும் இயல்பு வழக்கு என்பது தொல்காப்பியம் வழங்கும் இரு நிலைகள். அதாவது சொல்ல வந்ததை நேரே கூறாமல் மேன்மை கருதி வேறு சொல்லால் குறிப்பாக உணர்த்துவது தகுதி வழக்காகும். இது மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி என மூவகைப்படும். ஒன்றை நேரே கூறாமல், மறைமுகமாகத் தகுதியுடைய சொல்லால் கூறுவது ஆகும். இறந்தவரை துஞ்சினார் எனவும், ஓலையைத் திருமுகம் எனவும், இடுகாட்டை நன்காடு எனவும் வழங்குவர். பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றலும் யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் கள், சாராயம் முதலியவற்றைத் தண்ணி என்றலும் குழூஉக் குறியாகும்.

**சொற்பொருள் மாற்ற வகைகள்**

சொற்கள் காலப்போக்கில் மாற்றமடைகின்றன. ஒவ்வொரு மொழியின் சொல் வரலாற்றை நோக்கும்போது இதை அறியமுடிகிறது. சொற்களின் பொருள் மாற்றம் குறித்த ஆய்வு, அப்பொருள் மாற்றத்திற்கான காரணங்களையும், பொருள் மாற்றவகைகளையும், பொருள் மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளையும் விளக்குகிறது. காலத்திற்கேற்ப சொற்கள் தரும் பொருளில் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதைப் பல்வேறு சான்றுகளின்மூலம் உணரலாம்.

**சொல்லுக்குப் பொருள்**

சொல் தனித்து நின்று எந்தவிதமான ஒட்டுக்களையும் ஏற்காமல் பொருள் கொடுக்குமேயானால் அதனை சொற்பொருள் என்கிறோம். சொல்லுக்கு ஒரு பொருள் மட்டும்தான் என்பது மட்டுமன்றி

இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட பொருள்களும் இருக்கும் நிலை மொழிகளில் இருக்கிறது. ஒருசொல் இருபொருளை உணர்த்தி வந்தால் அவற்றுள் ஒன்று மொழியில் ஏற்படும் வளர்ச்சி மற்றும் மாற்றத்தினால் வழக்கில் இருக்க, மற்றொன்று அழிவையோ அல்லது திரிபையோ அடைகிறது. சான்றாக கவலை, போர் என்ற சொற்களில் கவலை என்ற சொல் இரண்டாகப் பிரியும் இடத்தையும், மனக்கவலையையும் உணர்த்தி வந்தது. இன்று மனக்கவலையை மட்டும் உணர்த்த, மற்றொரு பொருள் அழிந்தது. அதேபோல் போர் என்ற சொல் படை கொண்டு நிகழ்த்தும் போரையும், வைக்கோல் போரையும் குறிக்க இன்று வைக்கோல்போர் என்பது வழக்கில் உள்ளது.

**பொருளுக்குச் சொல்**

ஒரு பொருளைக் குறிக்க, உணர்த்த அல்லது உணர ஒரு சொல் மட்டுமே இருக்க வேண்டும் என்ற நியதி எந்த மொழியிலும் இல்லை. ஆனந்தம், மகிழ்ச்சி, சந்தோஷம்போன்ற சொற்களை எடுத்துக்கொண்டால் மூன்று சொற்களுமே எழுத்து வழக்கிலும் சரி பேச்சு வழக்கிலும் சரி ஒரே பொருளையே உணர்த்தி நிற்கின்றன. அன்பு, பாசம், காதல்; சாப்பிடு தின்னு, கொட்டிக்கொள், அமுதுபண்ணு போன்றப் சொற்களுக்கு பொருள் ஒன்றாக இருப்பினும் அவை பயன்படும் இடத்திற்கேற்ப உணர்பொருளைத் தருகின்றன. ஆனால் வரலாற்று நிலையில் நோக்கும்பொழுது ஒரு பொருளை உணர்த்த இருசொல் வழங்கின், ஒன்று நிற்க, மற்றொன்று அழிந்துவிடும் அல்லது வேறு பொருளுணர்த்தத் தொடங்கும். சான்றாக வீடு, இல்லம், மனை போன்ற சொற்கள் ஒருபொருளை உணர்த்தும் சொற்களாகும். இன்று பேச்சுவழக்கில் வீடு என்ற சொல்லே அப்பொருளை உணர்த்துவதாக நிலை பெற்றுள்ளது. இல்லம் என்பது இலக்கிய வழக்கோடு நின்றுவிட்டது. பேச்சு வழக்கில் அது அழிந்துவிட்டது. மனை என்பது, பேச்சுவழக்கிலும் எழுத்து வழக்கிலும் வீடு கட்டுவதற்குரிய நிலப்பகுதி என்று சிறிது வேறுபட்ட பொருளைக் குறிக்கின்றது.

**பலபொருள் ஒரு சொல்**

பல சொற்களுக்கு ஒரு பொருள் இருப்பதைப் போல ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பதையே பலபொருள் ஒரு சொல் என்கிறோம். சான்றாக படி எனும் சொல்லை எடுத்துக்கொண்டால் அச்சொல் வழங்குமிடத்திற்கு ஏற்ப பெயராகவும், வினையாகவும் பல பொருளில் வழங்குவதைக் காணமுடிகிறது. சான்றாக 'அவன் ஆறாம் வகுப்பு படிக்கிறான்', ‘அவன் தமிழ் புத்தகம் படிக்கிறான்’ என்ற இரண்டு வாக்கியங்களிலும் உள்ள படி என்ற சொல் முன்னது ‘study’ என்ற பொருளையும் பின்னது ‘read’ என்ற இரு பொருள்களை உணர்த்துகின்றன. நல்ல என்ற பெயரடை புலன் (sense) சார்ந்து எழுத்து வழக்கிலும், பேச்சு வழக்கிலும் பல பொருள்களைத் தருகிறது. எடுத்துக்காட்டாக நல்ல மனம், நல்ல காற்று, நல்ல கனவு, நல்ல சாப்பாடு, நல்ல நினைவு, நல்ல வலி, போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். இதில் அச்சொல் வருமிடத்திற்கு ஏற்ப பொருள் கொள்ளமுடியும்.

**பொருள் குறுக்கம்**

பழங்காலத்தில் பல பொருள்களுக்குப் பொதுவாக இருந்த சொல், தற்காலத்தில் அவற்றுள் ஒன்றையே உணர்த்துவதைப் பொருள் குறுக்கம் அல்லது சிறப்புப் பொருட்பேறு என்பர். பின்வரும் சொற்களைச் சான்றாகக் கூறலாம்.

| **சொல்** | **பழந்தமிழ்** | **தற்காலத் தமிழ்** |
|---|---|---|
| பொன் | தங்கம் வெள்ளி, செம்பு | பொன் |
| நெய் | எள்ளின் நெய், ஆவின் நெய் | (பசு) ஆவின் நெய் |
| கோயில் | அரண்மனை, கோயில் | கோயில் |
| பெண்சாதி | பெண்ணினம் | மனைவி |
| மறவர் | வீரர் | தனிப்பட்ட சாதி |

**பொருள் விரிவாக்கம்**

மொழிகளில் சொற்களுக்கான பொருள் குறுக்கம் அடைவதோடு பொருள் விரிவாக்கம் பெறும் என்பதை இருவேறு காலகட்டங்களில் மொழியை ஆய்வு செய்யும்பொழுது உணரலாம். பழந்தமிழ் காலத்தில் ஒருவகை பொருளுக்கு மட்டுமே வழங்கிய பெயர், பிற்காலத்தில் அதனோடு இணைந்த பலவற்றிற்கும் பொதுப் பெயராக வழங்குவதைப் பொருள் விரிவாக்கம் என்பர்.

| சொல் | பழந்தமிழ் | தற்காலத் தமிழ் |
| --- | --- | --- |
| மரக்கால் | மரத்தினால்ஆன அளவை | இரும்பு, பித்தளை, வெள்ளி, ஆன அளவை |
| எண்ணெய் | எள் எண்ணெய் | தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் மற்றும் பல. |
| புள்ளி | நிறுத்தற் குறி | நிறுத்தற் குறி, பெரிய மனிதர் |

**இடக்கரடக்கல்**

நாகரிகமல்லாத சொற்களை மறைத்து அவற்றின் பொருளை நாகரிகமான பிற சொற்களால் கூறுவதை இடக்கரடக்கல் என்பர். இதனால் இச்சொற்களில் பொருள் வேறுபடுவதுண்டு. எடுத்துக்காட்டாக வாய்பூசல் என்ற சொல் சாப்பிட்ட பிறகு கை, வாய் கழுவுதல் என்ற நிலையிலும், மயிர் வெட்டிக்கொண்டு வா என்பதற்குப் பதில் முடி வெட்டிக்கொண்டு வா என்பதும் இயற்கை உபாதைக்குப் பிறகு கால்கழுவு என்று கூறுவதும் இடக்கரடக்கல் ஆகும். இக்கால பள்ளி மாணவர்கள் One bathroom / two bathroom அல்லது Restroom என்பது இதன் வெளிப்பாடாகும்.

**பொருள் மங்கலமாதல்**

மொழியில் முன்பு இழிந்த பொருளில் வழங்கிவந்த ஒரு சொல் இன்று உயர்ந்த / மங்கலப்பொருளில் வழங்குவதை உயர் பொருட்பேறு அல்லது பொருள் மங்கலமாதல் என்பர். கள்ளுண்டு களித்தல் ‘களிப்பு’ எனப்பட்டது. ஆனால் இன்று ‘களிப்பு’ என்பது பொதுவான மனமகிழ்சியைக் குறிக்கின்றது. சூதாடுமிடத்தைக் குறித்த ‘கழகம்’ என்ற சொல் இன்று கற்றவர் பேரவையாகத் திருக்குறள் கழகம், பல்கலைக்கழகம் என வழங்குவதைக் காணலாம்.

**பொருள் அமங்கலமாதல்**

முன்பு உயர்ந்த பொருளில் வழங்கிவந்த ஒரு சொல் இன்று இழிந்த பொருளில் வழங்குவதைப் பொருள் அமங்கலமாதல் என்பர். பழந்தமிழில் ‘நாற்றம்’ என்ற சொல் சிறந்த மனம் என்று வழங்கிற்று. ஆனால் இன்று துர்நாற்றத்தையே குறிக்கிறது. ‘காமம்’ என்ற சொல் முன்பு உண்மை அன்பைக் குறிக்க இன்றோ தீயநோக்கத்தோடு கூடிய எண்ணத்தைக் குறிக்கிறது. குவியலாக இருக்கும் தானியத்தைக் குறித்த ‘குப்பை’ என்ற சொல் இன்று உதவாத பொருளையே குறிக்கிறது.

**ஆகுபெயர்**

ஒரு பொருளின் பெயர், அதனோடு தொடர்புடைய ஒத்தத்தன்மையற்ற மற்றொரு பொருளைக் குறிக்க வழங்குவதே ஆகுபெயர். எடுத்துக்காட்டாக காஞ்சிபுரம் / திருபுவனம் என்ற சொற்களை’ அவள் கல்யாணத்துக்கு காஞ்சிபுரம் / திருபுவனம் எடுத்தாள்’ என்று பயன்படுத்தும்போது காஞ்சிபுரம் / திருபுவனம் என்ற சொற்கள் நகரத்தின் பெயரைக் குறித்தாலும் இங்கு அந்நகரத்தில் புகழ்பெற்ற பட்டுச்சேலையையே குறிக்கிறது. வெள்ளை என்ற சொல்லின் அடிப்படைப் பொருள் வெள்ளை நிறத்தைக் குறிக்கும். ஆனால் சலவைத் தொழிலாளர் வெள்ளை கொண்டு வந்திருக்கிறார் என்ற வாக்கியத்தில் உள்ள வெள்ளை துவைத்த துணியையே குறிக்கிறது.

**உருவகம்**

ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் உணர்த்தாமல், தெளிவாக்க விரும்பி, ஒத்தத்தன்மையுள்ள மற்றொரு பொருளோடு உருவகப்படுத்தி அந்த உருவகச் சொல்லால் உணர்த்துதல் உருவகம் ஆகும். எடுத்துக்காட்டாக வாய் என்ற சொல் உடல் உறுப்பைக் குறிக்க பயன்பட்டாலும் பானை வாய், கத்தியின் வாய், மடை வாய், கொள்ளி வாய் போன்ற சொற்களில் வாய் உருவகப் பொருளைத் தருகிறது. பழுத்த கிழவர் என்பதில் பழுத்தல் என்பது உருவகமாகிப் பொருள் உணர்த்தலைக் காணமுடிகிறது. பழுத்தல் பழத்தின் தன்மை ஆதலின், இங்குக் கிழவர் பழம் போல் ஆனார் என்ற பொருள் கொண்டுள்ளது.

**சொற்பொருள் மாற்ற காரணங்கள்**

சொல்லாக்கம் மூலம் உருவாக்கப்படும் சொற்களின் பொருளானது, நாளடைவில் மாற்றம் அடைகின்றது. புதிய சொற்களும் கூட, சுருக்கமானதாகவும் எளிமையானதாகவும் வடிவெடுக்கின்றன. உலக மாற்றம், அறிவியல் கண்டுபிடிப்பு, சொற்பொருட் பரப்பு மாற்றம், மனித உணர்வு - மனப்பாங்கு மாற்றம், சொல் கடன்பேறு, போன்றவை சொற்பொருள் மாற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன.

பொருண்மையியலாளர்கள் (பொருளை [meaning] முக்கியமானதாகக் கருதுபவர்கள்) சொற்பொருள் மாற்றத்திற்குப் பின்வரும் சூழல்களைக் குறிப்பிடுவர்:

(1) மொழியியல் சூழல்
(2) வரலாற்றுச்சூழல்
(3) சமூகச்சூழல்
(4) உளவியல்சூழல்
(5) அயல்நாட்டுச் செல்வாக்கு
(6) புதுச் சொல்லாக்கம்

**மொழியியல் சூழல்**

பேச்சு வழக்கில், பிற சொற்களின் தொடர்பால், சொற்பொருள் மாற்றம் நிகழ்கின்றது. தமிழில் ‘பால்’ என்ற சொல் பகு என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டாலும் அதன் உண்மையான பொருள் ‘பிரிவு’ என்பதாகும். ஆனால் இச்சொல் ஆண், பெண், பலர் போன்ற சொற்களோடு சேர்ந்து வரும்பொழுது ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற உருபெற்று பால் பாகுபாட்டைப் புலப்படுத்துகின்றன.

**வரலாற்றுச் சூழல்**

ஒரு சொல்லுக்கு இன்று வழக்கிலிருக்கும் பொருளுக்கும், முன்னர் வழங்கிய பொருளுக்குமான வேறுபாடு வரலாற்று அடிப்படையில், புறக் காரணங்களால் ஏற்படக்கூடியதாகும். பண்டைக் காலத்தில் சமணர்கள் தங்கியிருந்த இடம் ‘பள்ளி’ என்று அழைக்கப்பட்டது. சமணர்கள் தமது பள்ளியில் எல்லோருக்கும் கல்வியைப் போதித்தனர். கல்வி கற்பிக்கப்பட்ட இடத்தினைப் பள்ளி என அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. இன்று கல்விக் கூடங்கள் பள்ளி என்று அழைக்கப்படுகின்றன. பள்ளி என்ற சொல்லானது சொற்பொருள் மாற்றமடைந்துள்ளது.

**சமூகச் சூழல்**

சமூக ஏற்றத்தாழ்வு, சாதிய அடுக்குமுறை, பொருளாதார மேம்பாடு, சமூக மதிப்பீடு போன்றன சொற்பொருள் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. முன்னர் போர் வீரன் என்ற பொருளில் வழங்கப்பட்ட ‘மறவன்’ என்ற சொல், இன்று ஒரு குறிப்பிட்ட சாதியினரைக் குறிப்பதாகச் சுருங்கியுள்ளது. இழத்தலைக் குறித்த ‘இழவு’ என்ற சொல், இன்று சாவிற்கானதாக மாறியுள்ளது. சூதாடுமிடத்தினைக் குறித்த ‘கழகம்’ என்ற சொல், இன்று பேரவையைக் குறிப்பதாக மாற்றம் பெற்றுள்ளது. சொற்களின் பொருள் மாற்றம் பெறுவதற்குச் சமூகமே முதன்மைக் காரணமாகும்.

**உளவியல் சூழல்**

சொற்பொருள் மாற்றத்திற்கு உளவியலும் காரணமாக அமைகின்றது. விலக்கப்பட்ட சொல் வழக்குகள் பெருகிட அச்சமும் நம்பிக்கையும் அடிப்படையாக விளங்குகின்றன. தாலி அறுத்தலைத் “தாலி பெருகிற்று“ என்று குறிப்பிடுகின்றனர் இரவில் பாம்பு என்று சொல்லாமல் ‘நீண்டது’ அல்லது ‘நல்லது’ என்றும் அம்மை போன்ற நோயை ஆத்தா, மாரியாத்தா என்பதும் அக்கி என்ற நோயைப்பேர் சொல்லாதது என்று குறிக்கும் வழக்கம் மனஅச்சத்தின் அடிப்படையிலானது. மான், தேன், கிளி, குயில் எனப் பெண்களையும், காளை, சிங்கம் என்று ஆண்களையும் உருவகப்படுத்துவது சொற்பொருள் மாற்றமாகும். இம் மாற்றத்தினுக்கு மனித மனமே மூலமாக அமைகின்றது.

**அயல்நாட்டுச் செல்வாக்கு**

பிற மொழிகளில் வழங்கும் சொல்லினை அதேபொருளில் தமிழில் வழங்குதலுக்கு அயல்நாட்டுச் செல்வாக்குக் காரணமாக விளங்குகின்றது. ஆங்கிலத்தில் Star, என்ற சொல் நட்சத்திரம் என்ற சொல்லோடு ஆங்கில மொழியின் தாக்கத்தால் திரைப்பட நடிகர் மற்றும் நடிகையை குறிப்பதும் Fan, என்ற சொல் மின்விசிறி என்பதோடு நடிகர், நடிகைகளின் ரசிகர்கள் என்று குறிப்பதும் அயல்நாட்டு செல்வாக்கினால் ஆகும்.

**புதுச் சொல்லாக்கம்**

புதிய தேவைகள், சமூக நெருக்கடிகள் காரணமாகப் புதுச் சொல்லாக்கம் தொடர்ந்து நடைபெறுகின்றது. பிற மொழிகளிலிருந்து சொல்லைக் கடன் பெறுதலும் பழைய சொல்லை மாற்றிப் புதுப்பித்தலும் இதன்கண் அடங்கும். அருவி என்ற சொல் 'water falls' என்ற ஆங்கில சொல்தாக்கத்தால் 'நீர் வீழ்ச்சி' எனும் சொல் உருவாக்கப்பட்டது. ஏவுதல் என்ற சொல்லினின்று 'ஏவுகணை' எனும் சொல் உருவாக்கப்படுகின்றது. உருண்டையாக இருப்பதனைக் குண்டு என்பதால், போரில் பயன்படுத்தப்படும் 'Bomb' குண்டு என்று வழங்கப்படுகின்றது.

**முடிவுரை**

எழுத்தியல் (Phonology), உருபனியல் (Morphology), உருபொலியன் (Morpho phonemic), சொல்லியல் (Lexicology), தொடரியல் (Syntax), பனுவல் (Text), இலக்கணம் (Grammar), சொற்பிறப்பியல் (Etymology), உருவகம் (Metaphor), உரைக்கோவை (Discourse), பயன்வழியியல் (Pragmatics) போன்றவற்றோடு உலகியல் அறிவு (World knowledge) என்ற அனைத்திற்கும் உயிர் கொடுப்பது பொருண்மையியல் (Semantics) ஆகும். புறஅமைப்பு அல்லது எழுத்து முறையை மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது இவை அனைத்தையும் பெறலாம் என்பது முடியாத செயலாகும். இதனால்தான் அமைப்பியலை விளக்க வந்த பெர்டினான் டி சசூர் பொருண்மையியல் இன்றி மொழியின் அமைப்பை விளக்கமுடியாது என்ற நிலையில் பொருண்மையியலின் அவசியத்தை எடுத்துரைத்தனர். வரலாற்று நிலையிலும், சமகால நிலையிலும் மொழியில் ஏற்படும் மாற்றம் மற்றும் வளர்ச்சியானது சொற்பொருளில் மாற்றத்தையும், வளர்ச்சியையும் உண்டாக்குகிறது. தாய்மொழியாளர்களின் உள்ளுணர்வோடு ஏற்புடையதாக உள்ள வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த சொல்விளக்கம் மொழி கற்பவர்களுக்கும், கற்பிப்பவர்களுக்கும் தேவைப்படுகிறது. கற்றல் மற்றும் கற்பித்தல் என்பது இலக்கணமின்றி அமையாது. சொற்பொருள் மட்டுமின்றி இலக்கணப்பொருளை விளக்குவதற்கு பொருண்மையியலின் தேவை அவசியம் என்பதை இதன் மூலம் அறிய முடியும்.

**References**

1. Cruse, D.A. 1986, Lexical Semantics, Cambridge university, Press, Cambridge.
2. Douglas Biber. et.al., 1998, Corpus Linguistics-Investigating language structure and use, Cambridge University Press.
3. Mark Stevenson, 2003, Word Sense Disambiguation - The case for combinations of knowledge sources, CSLI Pub. California.
4. தமிழண்ணல் 2007, தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம் மதுரை.